[14th March 1963

கெல்லாம் நபர்களை அமர்த்துகிற பொறுப்பில் உள்ள சர்விஸ் கமிஷன் மெம்பர் பதவிக்கு ரிடையர்டு நீதிபதி போன்றவர்களை நியமிக்க அரசாங்கம் சிபார்சு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தகுதி உடையவர்கள் யாரோ அவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

கனம் சபாநாயகர் : ரிட்டயர்ட் ஜட்ஜுகள் எல்லாம்கூட இப்போது அரசியலில் இருக்கிறார்கள்போல் இருக்கிறது.

மத்திய சிறை (வேலூர்).

* கேள்வி 226.—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் மத்திய சிறையில் குற்றவாளிகள் சாப்பிடுவதற்கு இட மில்லாமல் அவதிப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) அதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து மத்திய சிறையில் வேதனைப்படும் குற்றவாளிகளுக்கு சாப்பாடு வசதி செய்து கொடுக்கமாட்டார்கள் என்று தெரிகிறது. இதுவரை செய்யாவிட்டாலும் இனிமேலாவது அவர்கள் செய்து கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சாப்பிடுவதற்கு இடமில்லாமல் இருப்பது தெரியுமா என்பது கேள்வி. அதற்கு 'இல்லை' என்று விடையளித்தேன். இடம் இல்லாமல் கஷ்டப்படுகின்ற நிலை இல்லை. ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கட்டடத்தில் சாப்பிடாமல் வெளியில் சாப்பிடலாம். நாங்கள் எல்லாம் கூட அப்படித்தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். வெளியிடங்களில்தான் சாப்பிடுவது. சிறையில் அதிக எண்ணிக்கை இருந்தால் வெளியே சாப்பிடும் பழக்கம் உண்டு.

திரு. முனு ஆதி : உணவை இரும்புப் பாத்திரங்களில் தயாரிப்பதை விட்டு அலுமினியப் பாத்திரங்களில் தயாரிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இரும்புப் பாத்திரங்களில் தயாரிப்பது அலுமினியப் பாத்திரத்தில் தயாரிப்பதை விட ஆரோக்கியமானது என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. எஸ். முருகையன் : வேலூர் மத்திய சிறையில் அவர்கள் வெயில் காலத்தில் வெளியில் உட்கார்ந்து வெய்யிலில் சாப்பிடவேண்டியிருக்கிறது. மழைக் காலங்களில் மழையில் நனைந்துகொண்டு சாப்பிட வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே மூன்று நான்கு ப்ளாக்குகள் சேர்ந்தாற்போல் சாப்பிடுவதற்கு தனியாக ஒரு கட்டடம் அமைக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மழை காலங்களில் ஒண்டிக் கொள்ளலாம். எண்ணிக்கை அதிகமாகும்போது அதற்கென்று இனி சட்டடம் கட்டவேண்டுமென்றால், இப்போது கட்டுவதாக உத்தேசம் இல்லை. அதிக எண்ணிக்கை இருக்கும்போது வெளியில் சாப்பிடுவதில் அதிகக் கஷ்டம் இருப்பதாக நான் உணரவில்லை.